දුරකථන/தொலைபேசி இல./Telephone Nos.
අමාත්‍යතුමා / அமைச்சர் / Minister: 2784832, 2784807, 2785617
ලේකම් / செயலாளர் / Secretary: 2784812
කාර්යාලය / அலுவலகம் / Office: 2785141-50, Fax: 2784846
ඊමේල්/ஈ-மெயில்/E-mail : isurupaya@moe.gov.lk

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education
"ඉසුරුපාය"
බත්තරමුල්ල.
"இசுருபாயா"
பத்தரமுல்ல.
"Isurupaya"
Battaramulla.

ඔබේ අංකය / உமது இல. / Your No. ........................................

මගේ අංකය / எமது இல. / My No. ED/1/27/1/5/1/2007

දිනය / திகதி / Date 2007.12.13

சுற்றறிக்கை இல : 2007/20
திகதி : 2007.12.13

சகல மாகாணக் கல்விச் செயலாளர்கள்,
சகல மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்,
சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள்,
சகல கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள்,
சகல பாடசாலைகளின் அதிபர்கள்
சகல பிரிவெனாக்களின் தேரர்கள்.

## தேசிய ஆசிரியர் இடமாற்றக் கொள்கை

கல்விச் செயற்பாடுகளை மிகவும் பயன்மிக்கதாக மேற்கொள்ளக்கூடியவாறு மற்றும் மாணவ மாணவிகளினதும் ஆசிரியர்களினதும் உயர்ந்தபட்ச நலன்புரிச் செயற்பாடுகளுக்கு பொருந்தக்கூடியவாறு தேசிய ஆசிரிய இடமாற்றக் கொள்கையை தயாரிக்க வேண்டுமென அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இதனடிப்படையில் இத்தேசிய ஆசிரிய இடமாற்றக் கொள்கை கீழ்க் குறிப்பிடப்பட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டுமென அமைச்சரவையினால தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**1. தேசிய ஆசிரிய இடமாற்றக் கொள்கை கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டதாக இருக்க வேண்டும்.**

1.1 கல்வி சகல சந்தர்ப்பங்களிலும் மாணவர்களைக் கேந்திரமாக கொண்டிருக்க வேண்டுமென்பதனால் ஆசிரியர்களுக்கு இடமாற்றம் வழங்கும்போது மாணவர்களின் தேவைக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்.

1.2 கல்வியின் பண்புசார் விருத்திப் பணியை நிலையாகப் பேணுவதற்கு ஆசிரியர்களின் அறிவு, திறமை மற்றும் சிந்தனை அடிப்படையாக இருப்பதனால் ஆசிரிய இடமாற்றக் கொள்கை மூலம் ஆசிரியர்களுக்கு தமது அறிவு, திறமை விருத்திக்கான சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும்.

1.3 ஆசிரியர்களின் தொழில் பாதுகாப்புத் தொடர்பான நம்பிக்கையை உறுதிசெய்யக்கூடியவாறான முறையில் மற்றும் சுதந்திரமான கற்பித்தல் வெளிப்பாடு, அநீதியான ஆசிரிய இடமாற்றம் தொடர்பாக தேவையற்ற அச்சமின்றி சேவையாற்றக்கூடியவாறும், மற்றும் சேவைத்திருப்தியைப் உயர்ந்தபட்சம் அடையக்கூடியவாறு ஆசிரிய இடமாற்றக் கொள்கை தயாரிக்கப்பட வேண்டும்.

1.4 கல்வி தொடர்பாக பிரதேச ரீதியில் காணப்படும் வேறுபாடுகளை முடியுமான அளவு கட்டுப்படுத்தி, மாணவனை அடிப்படையாகக் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை தடையின்றி தொடர்ச்சியாக மேற்கொள்ளக்கூடியவாறு ஆசிரிய இடமாற்றக் கொள்கையின் அடிப்படை நோக்கமாக இருக்க வேண்டும்.

1.5 ஏதாவதொரு பிரதேசத்திற்கு மற்றும் பாடசாலைக்கு வரையறுக்கப்பட்டுள்ள மனிதவளங்களை நாட்டின் ஏனைய பிரதேசங்களில் வாழும் மக்களுக்கு பிரயோசனமான முறையில் ஆசிரிய சேவையிலுள்ள மனித வளங்களை நியாயமான முறையில் பகிரப்படுவதாக ஆசிரிய இடமாற்றக் கொள்கையின் மூலம் உறுதிப்படுத்த வேண்டும்.

1.6 ஒரு பிரதேசத்தில் அல்லது கல்லூரியில் தொடர்ச்சியாக சேவையாற்றுவதன் மூலம் ஏற்படக்கூடிய ஒருதலைப்பட்ச நிலைமை ஆசிரிய தொழில் விருத்திக்கு பாதிப்புக்களை ஏற்படுத்துவதனால் பல்வேறுபட்ட பிரதேசங்கள் பல்வேறுபட்ட சமூக பொருளாதார மற்றும் கலாச்சார சூழல்களில் உள்ள கல்லூரிகளின் சேவைக்கான சந்தர்ப்பத்தை வழங்குவதற்கும் பல்வேறுபட்ட அநுபவங்களை பெற்றுக்கொண்டு தமது செயற்றிறனை விருத்திசெய்வதற்கும் சகல ஆசிரியர்களுக்கும் சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும்.

1.7 இத்துறையில் மனிதவளத்தை முறையான முகாமைத்துவத்தின் கீழ் உயர்ந்தபட்ச செயற்றிறனை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்வதற்காக இக்கொள்கையின் மூலம் சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும்.

1.8 தேசிய ஆசிரிய இடமாற்றக் கொள்கையை விரிவாக மற்றும் நெகிழ்வுத் தன்மையுடன் ஆசிரிய இடமாற்ற சபையின் மூலம் அமுல்படுத்த வேண்டும்.

## 2. ஆசிரிய இடமாற்ற சபை

### 2.1 ஆசிரிய இடமாற்ற சபை உருவாக்கம்

மேற்கூறப்பட்ட நோக்கங்கள் மற்றும் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவதற்காக கீழ்க் குறிப்பிடப்பட்ட மட்டங்களில் ஆசிரிய இடமாற்ற சபைகளை உருவாக்கி அமுல்படுத்த வேண்டும்.

(i) வலயக் கல்வி அலுவலகம்
(ii) மாகாணக் கல்வி அலுவலகம்
(iii) நிரல் அமைச்சு

### 2.2 மாகாணங்களுக்கிடையிலான ஆசிரிய இடமாற்ற எண்ணிக்கையை தீர்மானிக்கும் சபை

மாகாணங்களுக்கிடையிலான ஆசிரிய எண்ணிக்கையை உறுதிப்படுத்தும் சபையாக கருதப்படுவது மாகாண ஆசிரிய இடமாற்றத்தை மேற்கொள்ளும்போது அவ்வவ் மாகாணங்களுக்கிடையிலான இடமாற்றம் மேற்கொள்ள முடியுமான ஆசிரிய இடமாற்ற எண்ணிக்கை குறித்து இணக்கப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்காக கல்வி அமைச்சின் ஆசிரிய சேவைக் குழுவினால் நிறுவப்படும் கீழ்க் குறிப்பிடப்பட்ட பிரதிநிதிகள் கொண்ட சபையாகும்.

1. சகல மாகாண அரச சேவை ஆணைக்குழு சபை செயலாளர்கள்
2. சகல மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்
3. தேசிய பாடசாலை கல்விப் பணிப்பாளர்
4. ஆசிரிய இடமாற்ற சபையை பிரதிநிதித்துவப்படுத்தும் தொழிற்சங்கப் பிரதிநிதிகள்

மேற்கூறப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு இச்சபையின் கூட்டத்திற்கு சமூகமளிக்காத சந்தர்ப்பத்தில் மாத்திரம் இவ் உத்தியோகத்தரை பிரதிநிதித்துவப்படுத்துவதற்காக பிரதிநிதிகளை பங்கேற்கச் செய்ய முடியும். அவ்வவ் மாகாணங்களுக்கிடையே ஆசிரிய இடமாற்றம் மேற்கொள்ள முடியுமான ஆசிரிய எண்ணிக்கை அவ்வவ் வகைகளுக்கமைய உறுதிப்படுத்தும் பணி இச்சபையினால் மேற்கொள்ளப்பட வேண்டும். பின்னர் மாகாணக் கல்விப் பணிப்பாளரினால் அவ்வெண்ணிக்கைக்குரியதாக மேற்கொள்ளப்படும் ஆசிரிய இடமாற்றத்திற்காக ஆசிரிய இடமாற்றப் பரிந்துரையை பெற்றுக்கொண்டு மாகாண அரசசேவை ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்க வேண்டும்.

### 2.3 ஆசிரிய இடமாற்ற சபையின் உள்ளடக்கம்

தாபன விதிக்கோவையின் IIIவது வாசகத்தின் 3.5வது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஒழுங்கு விதிகளுக்கமைய இருக்க வேண்டும். அவ்வாறாயின்

3.5. அ இவ்வாசிரிய இடமாற்றசபை இடமாற்ற மேன்முறையீட்டு சபைக்காக பெயரிடப்பட்ட உத்தியோகத்தர் ஒருவரைத் தவிர முகாமைத்துவப் பிரிவின் இரு பிரதிநிதிகள் (அதாவது திணைக்களத்தின் சிரேஷ்ட பிரதிப் பொறுப்பாளர் மற்றும் திணைக்களத்தின் பணிகளுக்குப் பொறுப்பான பதவிநிலை அதிகாரி) மூலமும்

ஆ. (i) திணைக்களத்தின் அல்லது உரிய சேவையிலுள்ள மொத்த உத்தியோகத்தர்களின் மொத்த எண்ணிக்கையில் 15% அல்லது அதனை விட அதிகமான உறுப்பினர்கள் கொண்ட மேற்கூறப்பட்ட திணைக்களத்திற்கு அல்லது சேவைக்குரிய அவ்வவ் தொழிற்சங்கங்கள் மூலம்

அல்லது

(ii) முழுமையான காலம் தொழிற்சங்க நடவடிக்கைகளுக்கான உத்தியோகத்தர் விடுவிக்கப்பட்டுள்ள அவ்வவ் தொழிற்சங்கங்களின்

அல்லது

பிரதிநிதி ஒருவரையும் கொண்டதாக இருக்கவேண்டும்.

### 2.4 ஆசிரிய இடமாற்றசபையின் செயற்பாடுகள்

i. தேசிய ஆசிரிய இடமாற்றக் கொள்கையை அமுல்படுத்தும் போது இடமாற்ற கோவையின் IIIவது வாசகத்தின் 3.1 மற்றும் 3.2 பிரிவுகளுக்கமைய மேற்கொள்வது அவசியமாகும். இருப்பினும் ஏதாவதொரு ஆசிரியருக்கு எதிராக ஒழுக்காற்றுச் செயற்பாடுகள் அல்லது சேவையின் தேவை அடிப்படையில் மிக அவசரமான மற்றும் விசேட சந்தர்ப்பம் அல்லது ஆசிரியரின் கோரிக்கையுடன் உடல்நலத்திற்கமைய (வைத்தியர்களின் பரிந்துரைகள் மூலம் உறுதிசெய்யப்பட்ட) மேற்கொள்ளவேண்டிய இடமாற்றம் உரிய பொறுப்பாளர்களினால் தீர்மானித்து அமுல்படுத்தவேண்டும். இருப்பினும் தேவையின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் ஆசிரியர்களின் இடமாற்றம் தொடர்பாக இரு வாரத்திற்குள் அது குறித்து ஆசிரிய இடமாற்ற சபைக்கு அறிவிக்க வேண்டும்.

ii. மிகவும் வசதியான பாடசாலை வகைக்குரிய பாடசாலைக்கு ஆசிரியர்களை நியமிக்கும் போது அவர்களின் ஆக்கத்திறன் பல்வேறுபட்ட துறைகளில் மேற்கொண்ட ஆய்வுகள் மற்றும் பாடசாலை சமுகத்திற்கு மேற்கூறப்பட்ட அடைவுமட்டத்தை அடிப்படையாகக் கொள்ளக்கூடிய முறையில் ஒழுங்குகள் மேற்கொள்ள வேண்டும்.

### 2.5 மேன்முறையீட்டுச் சபையின் உள்ளடக்கம்

இடமாற்றச் சபையை பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு உத்தியோகத்தரையும், திணைக்களப் பொறுப்பாளரினால் பெயரிடப்படும் இடமாற்றச் சபையை பிரதிநிதித்துவப்படுத்தாக இரண்டு பதவிநிலை உத்தியோகத்தர்களையும் தொழிற்சங்க பிரதிநிதி ஒருவரையும் உள்ளடக்கி இருக்க வேண்டும்.

## 3. ஆசிரிய இடமாற்றக் கொள்கையை அமுல்படுத்தும் போது கருத்திற்கொள்ள வேண்டிய விசேட விடயங்கள் /அடைவு மட்டங்கள்

ஆசிரிய இடமாற்றத்தை மேற்கொள்ளும் போது கீழ்க் குறிப்பிடப்பட்ட /விடயங்கள் அடைவு மட்டங்கள் தொடர்பாக விசேட கவனம் செலுத்த வேண்டும்.

### 3.1 பாடசாலை வகைப்படுத்தல்

இல. ED/3/37/9/2/3(i) மற்றும் 2005.01.18ம் திகதிய 2005/1 கொண்ட சுற்றறிக்கையின் 03ம் வாசகத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பாடசாலைகள்

(i) மிகச் சிறந்த பாடசாலை
(ii) சிறந்த பாடசாலை
(iii) விருப்பமற்ற பாடசாலை
(iv) கஷ்டப் பாடசாலை
(v) அதிகஷ்டப் பாடசாலை

என 5 வகையின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளதாக கருத்திற்கொள்ள வேண்டும். அத்துடன் தேசிய ஆசிரிய இடமாற்றக் கொள்கையை அமுல்படுத்துவதன் தேவையின் அடிப்படையில் சகல இடமாற்றங்களும் மேற்கொள்ளப்படும், பாடசாலை வகைப்படுத்தல் மூலம் அவ்வவ் சந்தர்ப்பங்களில் உரியதாக்கிக்கொள்ள வேண்டும்.

## 3.2 சேவைக்காலம் தொடர்பான விடயங்கள்

இலங்கை ஆசிரியர் சேவை பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஆசிரிய சேவை பிரமாணக் குறிப்பில் உள்ளடக்கப்பட்டுள்ள நிலையியற் குழுவினால் பெயரிடப்படும் பாடசாலை ஒன்றில் குறைந்தபட்ச சேவைக்காலம் சகல ஆசிரியர்களும் சேவையாற்றியிருக்கவேண்டும்.

| | | |
|---|---|---|
| i. | அதிகஷ்ட பாடசாலை அல்லது கஷ்ட பாடசாலை | - 03 வருடங்கள் (குறைந்த பட்சம்) |
| ii. | விருப்பமற்ற பாடசாலையில் | - 04 வருடங்கள் (குறைந்த பட்சம்) |
| iii. | விருப்பமான பாடசாலை | - 08 வருடங்கள் (ஆகக் கூடிய) |
| iv. | மிக விருப்பமான பாடசாலை | - 06 வருடங்கள் (ஆகக் கூடிய) |

இதனடிப்படையில் ஆசிரியர்களின் சேவைக்காலத்தை உரியதாக்கிக் கொள்ள வேண்டும்.

3.2.1 பாடசாலையை அடிப்படையாகக் கொண்டு ஆசிரியர்களை சேர்த்துக்கொள்ளும் கொள்கை அடிப்படையில் அங்கீகரிக்கப்படும் சந்தர்ப்பங்களில் நியமனக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கமைய நியமிக்கப்பட்ட பாடசாலையில் தொடர்ச்சியாக சேவையாற்ற வேண்டிய முழுக்காலத்தையும் பூரணப்படுத்த வேண்டும்.

## 3.3 கஷ்டப் பாடசாலையின் சேவைக்காலத்தை ஊக்குவித்தல்

மேற்கூறப்பட்ட வகைப்படுத்தலுக்கமைய கஷ்ட அல்லது அதிகஷ்ட பாடசாலை ஒன்றில் கட்டாய சேவைக்காலத்தை சகல ஆசிரியர்களினாலும் பூரணப்படுத்த வேண்டியதுடன் அக்கட்டாய சேவைக்காலத்திற்குப் பின்னர் அதிகஷ்ட அல்லது கஷ்ட பாடசாலையொன்றில் சேவையாற்றும் ஆசிரியர் ஒருவருக்கு கஷ்ட பாடசாலை சேவைக் கொடுப்பனவு வழங்கவேண்டும். இக்கொடுப்பனவு கஷ்ட அல்லது அதிகஷ்டப் பாடசாலையில் சேவையாற்றும் காலம் வரை மாதாந்தம் செலுத்தவேண்டியதுடன் அதற்காக 2008.10.18ம் திகதிய 2005/02 சுற்றறிக்கை மூலம் மற்றும் 2006/44 சுற்றறிக்கையின் ஒழுங்கு விதிகளை பின்பற்ற வேண்டும். இதனடிப்படையில் அதிகஷ்ட பாடசாலை ஒன்றின் சேவைக்காக ஆசிரியர் ஒருவருக்கு மாதாந்தம் 2500 ஊக்குவிப்புக் கொடுப்பனவும் கஷ்டப் பாடசாலை ஒன்றின் சேவைக்காக மாதாந்தம் ரூ.1500/- கொடுப்பனவும் செலுத்த வேண்டும். இருப்பினும் கல்விச் செயலாளரினால் கஷ்ட அல்லது அதிகஷ்ட பாடசாலையின் சேவை தொடர்பில் இடைக்கிடையே வழங்கப்படும் ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளும் இதற்கு மேலதிகமாக கருத்திற்கொள்ளப்பட வேண்டும்.

## 3.4 ஏனைய விடயங்கள்

(i) 55 வயதை தாண்டியுள்ள ஆசிரியர்களுக்கு அவர்களின் கோரிக்கையை தவிர இடமாற்றங்களை மேற்கொள்ளக்கூடாது.

(ii) சுகாதார காரணங்களின் அடிப்படையில் ஆசிரியர் ஒருவரினால் இடமாற்றம் கோரும் போது தமது சுகாதார நிலைமையை உறுதி செய்வதற்காக அரச வைத்திய சபையின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும். கர்ப்பிணித் தாய்மார்கள் தொடர்பாக அவரின் விருப்பின்றி இடமாற்றம் செய்யக்கூடாது. இது எவ்வாறாக இருப்பினும் கர்ப்பிணித் தாய்மார்களினால் இடமாற்றம் கோரும் போது செயற்படவேண்டியது வைத்திய அறிக்கை மூலம் உறுதிசெய்யப்படும் விடயங்களை அடிப்படையாகக் கொள்ளப்பட்டுள்ளது. மகப்பேற்றின் பின்னர் தாய் ஒருவருக்கு பிள்ளை கிடைத்து ஒரு வருடம் வரை தமது நிரந்தர வதிவிடத்திற்கு அருகாமையில் உள்ள பாடசாலைக்கு தற்காலிகமாக சேவையில் இணைத்துக்கொள்வதற்கான உரிமையை வழங்கமுடியும். இதற்காக ஆசிரிய தாய்மார்களால் கோரிக்கை சமர்ப்பிப்பது அத்தியாவசியமாகும். ஆசிரியரின் சொந்த சுகாதாரத்திற்கு மேலதிகமாக ஆசிரியருடன் இணைந்துள்ள நேரடியாக அழுத்தங்களை விடுக்கக்கூடிய கீழ்க் குறிப்பிட்ட குடும்பத்தின் அங்கத்தவர்களின் சுகாதார நிலைமை இடமாற்றம் பெறுவதற்காக கருத்திற்கொள்ளப்படும்.

1. கணவன்
2. பிள்ளைகள்
3. பெற்றோர் /கணவனின் பெற்றோர்

(iii) முதல் நியமனக் கடிதம்

ஆசிரியராக சேர்த்துக்கொள்ளும்போது வழங்கப்பட்ட முதல் நியமனம் கஷ்ட, அதிகஷ்ட, வகைக்குரிய பாடசாலையில் உரிய குறைந்தபட்ச கால எல்லையின் கீழ் அவ்வாறான பாடசாலை வழங்கப்பட வேண்டியதுடன் குறைந்தபட்ச சேவைக்காலத்தை பூர்த்திசெய்ததன் பின்னர் அவ்வாசிரியருக்கு தாம் விரும்பிய பாடசாலைக்கு இடமாற்றம் பெற்றுக்கொள்ள கூடியதாக இருக்கவேண்டும்.

(iv) இவ் தேசிய ஆசிரிய இடமாற்றக்கொள்கையின் சித்தாந்தத்தின் கீழ் சகல அசிரியரும் இடமாற்ற சபையினால் தமது பணிகளுக்குரியதான செயற்பாட்டு கோவைகளைத் தயாரித்து அதனடிப்படையில் செயற்படும் கொள்கை அடிப்படையில் இருக்கவேண்டும்.

(v) மேலதிக மற்றும் பாட இணை ஆசிரிய சமநிலைக்காக அவ்வவ் பாடங்களுக்காக தொடர்புபட்ட ஆசிரிய சமநிலைப்படுத்தலுக்காக அவ்வவ் பாடங்களுக்காக விடயப் பணிப்பாளர்கள் கொண்ட குழு நியமிக்கப்பட வேண்டும். அவர்கள் மூலம் பெறப்படும் பரிந்துரையின் அடிப்படையில் மேலதிக மற்றும் பாட இணை செயற்பாடுகள் கொண்ட ஆசிரியர் சமநிலைப்படுத்தும் பணிகளுக்காக பரிந்துரைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டியதுடன் அச்சமநிலைப் பணிகள் ஆசிரிய இடமாற்ற சபையினால் மேற்கொள்ள வேண்டும். அத்துடன் மேலதிகத்தை இனங்காணும் முறைகளை தயாரிப்பதற்காக விடயத்திற்குப் பொறுப்பான கல்விப் பணிப்பாளர் மற்றும் ஆசிரிய இடமாற்ற சபையின் பிரதிநிதிகளினால் பொருத்தமான நடவடிக்கைகள் தயாரிப்பது அவசியமாகும். அம்முறைகள் தேசிய ஆசிரிய இடமாற்ற கொள்கைக்கு அமைவாக இருக்கவேண்டும். அதிபர் மற்றும் மேலதிக ஆசிரியர்களினால் பூரணப்படுத்தப்பட்ட தகவல் படிவம் மேலதிக ஆசிரியர்களை சமநிலைப்படுத்தும்போது அடிப்படையாகக் கொள்ள வேண்டும். அத்தகவல்களைக் கருத்திற்கொண்டு ஆசிரிய இடமாற்ற சபையினால் இடமாற்றம் வழங்க வேண்டியதுடன் அது தொடர்பான மேன்முறையீடு சமர்ப்பிப்பதற்காக ஆசிரியருக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும்.

(vi) இடமாற்றம் பெற்ற ஆசிரியர் அவ்விடமாற்றத்திற்கு எதிராக முறைப்பாடு சமர்ப்பித்த சந்தர்ப்பத்தில் அம்முறைப்பாட்டுக்கு முறைப்பாட்டு சபையினால் பதில் கிடைக்கும்வரை தற்பொழுது சேவையாற்றும் பாடசாலையில் சேவையாற்ற சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும். மேன்முறையீட்டு சபையின் தீர்மானம் இடமாற்றம் பெற்ற தினம் தொடக்கம் ஒரு மாதத்திற்குள் உரிய ஆசிரியருக்கு வழங்கப்பட வேண்டும்.

(vii) மேலதிகத்தை இனங்காணுதல் 3.2 பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளவேண்டியதுடன் பாடசாலைகளில் தொடர்ந்தும் மேலதிக ஆசிரிய எண்ணிக்கை ஏற்படக்கூடியவாறு ஆசிரியர்களை நியமிக்கக்கூடாது.

## 04. இடமாற்றம் மேற்கொள்ளும் கால எல்லை

மேற்கூறப்பட்ட 2.4 வாசகத்தில் விசேடமாக கூறப்பட்டுள்ள சந்தர்ப்பங்களைத் தவிர சகல சந்தர்ப்பங்களிலும் ஆசிரியர்களின் இடமாற்ற செயற்பாடுகள் காரணமாக மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் ஏற்படக்கூடிய கஷ்டங்களை மட்டுப்படுத்தக்கூடிய வகையில் ஆசிரிய இடமாற்ற செயற்பாடுகள் சகல ஆண்டுகளிலும் மே மாதம் 31ம் திகதி ஆரம்பித்து நவம்பர் மாதம் 01ம் திகதி முடிவுறுத்த வேண்டும். (அடுத்த ஆண்டின் ஜனவரி 01ம் திகதி தொடக்கம் அமுல்படுத்த வேண்டும்)

### 4.1 ஆசிரிய இடமாற்ற செயற்பாடுகளுக்குரிய கால எல்லை

வருடாந்த ஆசிரிய இடமாற்றம் மேற்கொள்ள உரிய கால எல்லை கீழ்க் குறிப்பிடப்பட்டவாறு அமைகின்றது.

| விடயங்கள் | காலை எல்லை |
|---|---|
| 1. ஆசிரிய இடமாற்றங்களின் உரிய சகல தகவல்களையும் திரட்டுதல் | மே 31இற்கு முன்னர் |
| 2. ஆசிரிய இடமாற்ற விண்ணப்பப்படிவங்களை கோரல் | ஜுன் 01 – ஜுன் 30 வரை |
| 3. இடமாற்ற சபையின் கூட்டத்தை நடாத்தல் | ஜுன் 01 – ஜுலை 31 வரை |
| 4. ஆசிரிய சபைகளின் பரிந்துரையைப் பெறல் | ஆகஸ்ட் 01 – ஆகஸ்ட். 15 வரை |
| 5. இடமாற்றக் கடிதத்தை வழங்குதல் | செப். 15 – செப். 30 வரை |
| 6. மேன்முறையீடுகளைப் பொறுப்பேற்றல் | ஒக். 01 – ஒக். 15 |
| 7. மேன்முறையீட்டு சபைகளின் தீர்மானங்களைப் பெற்றுக்கொள்ளல் | நவ. 01 இற்கு முன்னர் |

பொதுவாக வருடாந்த ஆசிரிய இடமாற்றத்தைத் தவிர 2.4இன் கீழ்க் குறிப்பிடப்பட்ட விசேட சந்தர்ப்பங்களில் மேற்கொள்ளப்படும் ஆசிரிய இடமாற்றத்தை மிகவும் செயற்றிறனுடன் மற்றும் தேசிய ஆசிரிய இடமாற்றக் கொள்கையின் அடிப்படையில் அடிப்படை விடயங்களுக்கு பாதிப்புகள் ஏற்படாதவாறு மேற்கூறப்பட்ட கால எல்லையைத் தவிர்த்து அமுல்படுத்த முடியும்.

5. இக்கொள்கைக்கு முரணாகக் குறிப்பிடப்பட்டுள்ள சந்தர்ப்பங்களைத் தவிர ஏனைய சகல சந்தர்ப்பங்களிலும் ஆசிரியர்களின் இடமாற்றம் தொடர்பாக தாபன விதிக்கோவையின் 03வது வாசகத்தின் ஒழுங்கு விதிகளுக்கமைவாக செயற்பட கொள்கை அடிப்படையில் பின்பற்ற வேண்டும்.

6. இத்தேசிய ஆசிரிய இடமாற்றக் கொள்கை 2008.01.01ம் திகதி தொடக்கம் அமுல்படுத்தக்கூடியவாறு இடம்பெற வேண்டும். எனவே ஆசிரியர்களின் இடமாற்றம் தொடர்பாக செயற்படும் சகல உத்தியோகத்தர்களினாலும் இக்கொள்கைக்கமைய செயற்பட வேண்டுமென அறிவிக்கிறேன்.

7. இத்தேசிய ஆசிரிய இடமாற்றக் கொள்கை அமைச்சரவை அங்கீகாரம் கிடைக்கப்பெற்ற கொள்கை என்பதனால் மாகாண மட்டத்தில் பிரதேச தேவைகளைக் கருத்திற்கொண்டு ஏதாவதொரு ஆசிரிய இடமாற்றக் கொள்கையை தயாரிப்பதாக இருப்பின் அதன் கொள்கையில் எந்தவித விடயமும் தேசிய ஆசிரிய இடமாற்றக் கொள்கைக்கு புறம்பாக இருக்கக்கூடாது.

எம்.எம்.என்.டீ. பண்டார
செயலாளர்,
கல்வி அமைச்சு.

பிரதிகள் : கணக்காய்வாளர்
அரச சேவை ஆணைக்குழு சபையின் கல்விச் சேவைக் குழுவின் செயலாளர்
சகல மாகாண பிரதம செயலாளர்கள்
மாகாண அரசசேவை ஆணைக்குழு சபை செயலாளர்கள்
நிதி ஆணைக்குழு சபையின் செயலாளர்
பணிப்பாளர் நாயகம் - தேசிய கல்வி நிறுவகம்
பரீட்சை ஆணையாளர் நாயகம்
வெளியீட்டு ஆணையாளர் மற்றும் பி.க.ப.நா
செயலாளர், தேசிய கல்வி ஆணைக்குழு
பணிப்பாளர் நாயகம், ஆசிரிய பயிற்சி அதிகாரிகள்.
கல்வி, உயர் கல்வி அமைச்சின் சகல பிரிவுகளினதும் பொறுப்பு உத்தியோகத்தர்
செயலாளர், ஆசிரிய ஊழிய எண்ணிக்கைக் குழு
ஆவணப் பிரிவு
தொழிற்சங்கப் பிரதிநிதிகள்